# நீங்கள் தேடும் நிம்மதி இயேசுவிடமே உண்டு

அன்பார்ந்த நண்பரே,

உமது வாழ்வை முற்றிலும் புதுப்பிக்க வல்ல, மிக மிக அருமையானதொரு நற்செய்தியை உம்மோடு பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்நற்செய்தி இது வரை நீர் கேட்டிராததொன்றாயிருக்குமென நம்புகிறேன்.

இவை குறித்து நீர் சிந்தித்ததுண்டா?--- *"நான் உண்மையில் யார்?" "நான் எங்கிருந்து தோன்றினேன்?" "இவ்வுலகில் நான் இருப்பதன் நோக்கம்தான் என்ன?" "இன்று என் உயிர் பிரிந்தால் நான் எங்கிருப்பேன்?"* இயல்பான மனிதனின் இதயத்தை ஆளுகை செய்யும் வெறுமை, அதிருப்தி, துயரம் ஆகியவற்றின் காரணம் எதுவாயிருக்கும்?

பணம், பதவி, சொத்து, அழகு போன்ற எதுவும் உண்மையான மகிழ்ச்சியையோ், உண்மையான திருப்தியையோ, உண்மையான சமாதானத்தையோ தரவல்லனவல்ல என்பதை மறுக்க முடியுமா? உம்மைப் பொறுத்த வரை, மனித இதயத்தின் உண்மையான, மிக முக்கியமான தேவைதான் என்ன? தன் இதயத்தின் வெறுமையை மாற்றியமைக்கவும், அதிருப்தியை அகற்றவும், துயரத்தை வெல்லவும் மனிதன் எவ்வகையிலும் வலுவற்றவனாயிருப்பதன் காரணம்தான் என்ன?
.

தன் தாயைப் பிரிந்ததால் ஏங்கி அழும் பச்சிளங் குழந்தையை எந்த பொம்மையாலும் சமாதானப் படுத்த இயலா. தண்ணீரின்றி துடிதுடிக்கும் மீனின் உயிரைக் காக்க தண்ணீரால் மட்டுமே ஆகும். அவ்வாறே, இறைவனின் சுவாசத்தினின்று உயிர் பெற்ற மனித ஆன்மாவின் தாகத்தையும் ஏக்கத்தையும் எவ்வித உலகப் பொருளாலும்

தீர்க்க இயலா. மனிதனுக்கு இறைவனின் நல்லுறவு இன்றியமையாதது!!

மரண பயமில்லாதோர் எவருமேயிலர்; ஏழை, பணக்காரர், அறிவாளி, அறிவிலி, வலுவுற்றோர், வலுவற்றோர் எவருமே இதற்கு விதி விலக்கல்லர். ‘மனிதன் முழு உலகையும் தனதாக்கிக்கொண்டாலும், தன் ஆன்மாவை வீணாக்கினால் அவனுக்குப் பயனென்ன?’ எனும் கூற்று முற்றிலும் உண்மையே. மரணமென்பது மனுக்குலத்திற்கு எக்காலத்தும் அறிவுக்கெட்டாததாகவும், புதிராகவுமேயுள்ளது. இவ்வுண்மை, “மரணத்துக்குப் பின்?” எனும் வினாவை எழுப்புகின்றது. இவை குறித்து பல்வேறு கூற்றுக்கள் உளன. இவற்றுள் எது மெய், எது பொய்? இவை குறித்துள்ள பல்வேறு கருத்துக்கள் ஆன்மாவின் மீட்பு (இரட்சிப்பு, விண்ணகப்பேறு) குறித்த தாகம் அனைவரிடமும் உள்ளதைத் தெளிவு படுத்துகின்றன.

மானிட வாழ்வு நிலையற்றதென்பதைத் தாங்கள் எப்போதேனும் ஆழ்ந்து சிந்தித்ததுண்டா? மறு நொடி நமக்கு என்ன சம்பவிக்கும்? நம் உயிர் பிரியுமுன்பே இவை குறித்த தெளிவு நமக்கு மிக மிக அவசியமென ஒத்துக்கொள்கிறீர்களா?

**“மனிதன்” யார்?**

மனிதன் இறைவனைப் போன்றும் இறைவனின் வடிவிலும் உருவமைக்கப்பட்ட அழிவற்ற ஆன்மாவை யுடையவன்; மனச்சான்று வாயிலாக நன்மை- தீமை குறித்த பகுத்தறிவு பெற்றவன். எனவே, தன் சிந்தைகள், சொற்கள், செயல்கள் அனைத்தும் குறித்து இறைவனுக்கு கணக்குக் கொடுக்கக்

கடன் பெற்றவன். மாறாக, இதர உயிரனங்கள் அனைத்தும் ஆன்மாவும், மனச் சான்றும் அற்றவை; நற்செயலுக்கும் தீச்செயலுக்குமுள வேறுபாடு அறியாதவை. எனவே,

அநீதியைத் தவிர்க்கவும் நீதியைச் செய்யவும் அவை எதிர்பார்க்கப்படுவதில்லை; கற்பின்மை கூட அவற்றுள் இயல்பானதே. அதினும் முக்கியமாக, அவை அனைத்தும் இறை நாட்டமும் இறைப் பற்றுமற்றவை. மரணத்தோடு அவ்வுயிரினங்கள் முடிவடைகின்றன; அவற்றுக்கு நிலை வாழ்வு கிடையா. ஒரு பறவையோ, மிருகமோ சாலையருகே உயிறிழந்து கிடந்தால் நாம் அதைப் பொருட்படுத்துவதில்லையே. மாறாக, மனிதன் உயிரிழந்த பின்பும், அவன் ஏழையானாலும், பிச்சைக்காரனானாலும் அவ்வுடலுக்கு நாம் உரிய மரியாதை செலுத்துகின்றோம்.

மனிதனின் இறை நாட்டம்

எல்லா நாட்டவரிடையேயும் இறைப் பற்று பல் வேறு வகைகளில் வெளிப்படுகின்றது. ஒவ்வொருவரும் வெவ்வேறு வகைகளில் இறைவனை வழிபடுகின்றனர். இறை நாட்டமே இவை அனைத்தையும் உந்துகின்றது. மனிதன் மரண பயத்தால் உந்தப்பட்டு பாவத்தினின்று விடுவிக்கப்பட்டு மீட்படைய (இரட்சிப்படைய, விண்ணகப்பேறடைய) முயற்சிக்கிறான். இந்நோக்கத்திற்காகவே மனிதன் பக்தி யாத்திரைகள், தான தருமங்கள், பலிகள் மற்றும் சடங்காச்சாரங்களில் ஈடுபடுகிறான்.

எனினும் இவையனைத்தும் கேள்விக் குறிகளாகவேயுள்ளன.

மனிதன் பிறப்பாலும் செயலாலும் பாவியே

நீதிமான் என்பார் ஒருவருமிலர், எவருமேயிலர். உணர்வுள்ளோர் மறறும் இறைவனைத் தேடுவோர் எவருமிலர். யாரும் கற்றுத் தராமலே குழந்தைகள் கூட களவு செய்கின்றனர்; பொய் பேசுகின்றனர். நர்சரி ரைமில், “ஜானி, ஜானி!” “என்ன, அப்பா?” “சர்க்கரை சாப்பிட்டாயா?” “இல்லை, அப்பா!” என காண்கிறோம். மனிதன் பாவம் செய்ததால் பாவி எனப்படாமல், இயல்பாகவே பாவியாயுள்ளான். பாவம் செய்வோர் பாவத்திற்கு அடிமைகளாயுள்ளோர். மனித இதயமே அனைத்திலும் சூழ்ச்சி நிறைந்ததும், சீர்கெட்டதுமாயுள்ளது. அதினின்றே தீய சிந்தை, கொலை, விபச்சாரம், பரத்தன்மை, களவு, பொய், அவதூறு முதலியன புறப்பட்டு மனிதனைக் களங்கப்படுத்துகின்றன. களவு செய்த நபரை ‘திருடன்’ என நீதிமன்றம் குறிப்பிடுகின்றது. எனினும், இயல்பாகவே அவர் கள்வராயுள்ளதாலேயே களவு செய்கின்றார்.

### பாவத்தின் சம்பளம்

பாவம் மனிதனை இறைவனிடமிருந்து பிரித்து, இருவருக்குமிடையே பகையை உருவாக்குகின்றது; நீதிபரரும் தூயவருமாம் இறைவனின் சினத்துக்கு மனிதனை உட்படுத்துகின்றது. மனிதனின் அனைத்து பாவங்களும் இறைவனுக்கு எதிரானவையே; பாவ சுமையே அனைத்து சுமைகளிலும் கொடியது. பாவத்தின் தண்டனையினின்று தப்ப மனிதன் பல வழிகளைக் கையாளுகின்றான்; ஆயினும் பாவத்தின் சம்பளம் மரணமே. மனிதர் அனைவரும் ஒரு முறை இறப்பதும், பின்னர் இறுதித் தீர்ப்பை சந்திப்பதும் இறைவனின் நியமம். மண்ணினின்று உருவாக்கப்பட்ட மனித உடல் மரணத்துக்குப் பின் மண்ணுக்குத் திரும்புகின்றது; அவனது ஆன்மா இறைவனிடம் அவரது தீர்ப்புக்காகத் திரும்புகின்றது.

## மதம் மனிதனை இரட்சிக்குமா?

நற்செயல்கள், தான தருமங்கள், மதச்சடங்குகள் முதலியவை மூலம் பாவத்தினின்று விடுதலை பெற்று மோட்சத்தை சென்றடையலாமென சிலர் கருதுகின்றனர். ஆயினும் இறைவனின் நீதியுள்ள நியாயத் தீர்ப்பினின்று தப்ப அவை போதுமானவையயல்ல.

எடுத்துக்காட்டாக, நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டவர் நீதிபதியிடம், 'அய்யா, நான் சிறு வயதிலிருந்து நல்லவனாகவே இருக்கிறேன்; நான் பொய், விபச்சாரம் முதலியவற்றில் ஈடு பட்டதில்லை; பல நற்செயல்களையும், தான தருமங்களையும் செய்துள்ளேன்' என முறையிட்டால் சட்டம் அவரை விடுதலையாக்க இயலுமா? நிசசயம் இயலா.

'பாவம்' எனும் உளையில் சிக்குண்ட எவரும் தன்னைத் தானே விடுவித்துக் கொள்ள இயலாது. அவ்வாறே, மார்க்க சடங்காச்சாரங்கள், சட்ட திட்டங்கள், சன்மார்க்க சித்தாந்தங்கள், அறிவுரைகள் முதலியன பாவ உளையினின்று மனிதனை விடுவிக்க வல்லன அல்ல. மனிதனை மீட்பதற்கு மீட்பர் (இரட்சகர்) ஒருவர் கட்டாயம் தேவைப்படுகிறார்!!

## இறைவனின் பேருதவி

மானிடர் அனைவருமே பாவத்தில் பிறந்து, பாவத்தில் வாழ்ந்து, பாவத்தில் மரிக்கின்றனர். பிறரது ஆன்மாவை மீட்கவோ, பிறருக்குரிய தண்டனையைத் தம் மீது ஏற்றுக்கொள்ளவோ எந்த மனிதராலும் கூடா. மனித ஆன்மாவின் மீட்பின் விலை அளவிட இயலாததொன்று. அழிவற்ற நித்திய வாழ்வின் விலையை செலுத்த மனிதனால் இயலா.

பார்வையற்றவருக்கு வழிகாட்ட பார்வையற்ற இன்னொருவரால் இயலுமா? அவ்வாறே, மத குருக்கள், போதகர்கள், பிரசங்கிப்போர், சான்றோர் அனைவரும் பிறரைப் போன்றே பாவத்தில் பிறந்து, பாவத்தில் வாழ்ந்து, பாவத்தில் மரிப்பதால், அவர்களால் பாவத்தின் கோரப்பிடியினின்று எவரையும் விடுவிக்க இயலா. மீட்கப்பெற்று விண்ணகமடைவதற்குரிய விலை எவருமே செலுத்த இயலாத அளவு பெரிது. எனினும், அன்பும், காருண்யமும், பேரிரக்கமும் நிறைந்த இறைவன், பாவத்தினின்றும், நரகத்தினின்றும் மனுக்குலத்தை மீடபதற்கென நித்திய திட்டமொன்றை உலகத் தோற்றத்திற்கு முன்பே வகுத்திருந்தார். அதென்னவெனில், மனுக்குலத்தின் மீது ஆளுகை செய்யும் பாவத்தை தண்டிப்பதன் வழியாக பாவத்தின் மீது தூயவரும் நீதிபரருமாகிய தாம் கொண்டுள்ள சினத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதே.

ஆயினும், பாவம் புரிந்துள்ள மனுக்குலத்தின் சார்பாக தண்டனையை ஏற்றுக்கொள்ளத்தக்க பாவமற்ற மனிதர் எவருமே புவியிலில்லை என இறைவன் கண்டார். மனிதனை பாவத்தினின்று மீட்பதற்காக இறைவனே மானிட வடிவேற்று, ஒரு பாவமுமின்றி வாழ்ந்து, மனுக் குலத்தின் பாவத்துக்குரிய தண்டனையைத் தம் மீது ஏற்றுக் கொள்வதுதான் ஒரே வழி.

## இறைவன்

இறைவன் யார்? அவரது வடிவம்தான் என்ன? அவரது தனித்தன்மைகள் எவை? அவரது இறைத் தன்மை, என்றுமுள வல்லமை, மாட்சிமை முதலியவற்றை அவரது படைப்புக்களை (எடுத்துக் காட்டாக, எண்ணற்ற விண் சுடர்கள்! அளவிட இயலா மாபெரும் அண்டசராசரம்!)

கூர்ந்து நோக்கி நாம் உணர்ந்துகொள்ளலாம். இம்மாபெரும் அண்டசராசரத்தை உருவாக்கியவர் இறைவனே. அனைத்தையும் உருவாக்கியவர் உருவாக்கப்பட்ட அனைத்தினின்றும் வேறு பட்டவர். அனைத்தையும் ஆளுகை செய்பவரும், அண்டசராசரமும் உள்ளடக்கக் கூடாதவருமாம் இறைவன் மனிதக் கரங்களால் உருவாக்கப்பட்ட கோயிலினுள் குடி கொள்வதெவ்வாறு? அவரை மனிதனால் உருவாக்க இயலுமா?

இறைவன் உயிருள்ளவரும், பார்வையுள்ளவரும், பேசுபவரும், தம் பிள்ளைகளின் வேண்டுதல்கட்குச் செவி கொடுக்க வல்லவருமாயல்லவா இருப்பார்? இயல்பான மனிதன், கோபம், இச்சை, பெருமை முதலியனவற்றால் பாதிக்கப்பட்டவன். ஆனால், இறைவன் மனித இயல்புகளாகிய கோபம், இச்சை, பெருமை, பொறாமை முதலியவற்றிற்கு அப்பாற்பட்டவராகவும், நல்லவரும், நீதி, தூய்மை, உண்மை, அன்பு ஆகியன நிறைந்தவராகவும் அல்லவா விளங்க வேண்டும்? மேலும், அவர் அனைத்துக்கும் மேலானவரும், அனைத்தையும் ஆளுபவரும், அனைத்தையும் செய்ய ஆற்றலுள்ளவரும், எங்கும் நிறைந்தவரும், எல்லாம் அறிந்தவரும், நித்தியரும், தொடக்கமும் முடிவுமானவரும், உண்டாக்கப்படாதவருமாயல்லவா விளங்குவார்? மெய்யாகவே, அளவற்ற இரக்கமுள்ள இறைவன், தம் பிள்ளைகள் மீட்கப்பெற்று விண்ணக வீட்டை சென்றடையும் பொருட்டு ஏதாவது செய்யாதிருப்பாரா? நம் ஊனுடலுக்கு தந்தை யொருவர் உள்ள வாறே, மானிட ஆன்மாக்கள் அனைத்துக்கும் இறைவனே தந்தை ஆவார்.

அக்கிரமங்கள், பாவங்கள் மற்றும் மீறுதல்களின் விளைவாக சங்கிலியால் கட்டுண்டு நித்திய நரகத்தை நோக்கி இழுத்துச் செல்லப்படும் மனிதனுக்கு இரங்குவார் யார்? மனுக்குலத்தின் பாவத்துக்குரிய தண்டனையைச் சுமந்து, மீட்பின் விலையை செலுத்தி, பாவத்தின் கோரப்பிடியினின்று விடுவிக்கத்தக்க பாவமற்ற மனிதன் யாருமில்லையே! எனவே, 2,000 ஆண்டுகட்கு முன்னர், கன்னியாகிய மரியா தூய ஆவியின் ஆற்றலால் கருவுற்றதன் வாயிலாக தேவாதி தேவனே மானிட வடிவேற்றார். அவர் தாம் இயேசு கிறிஸ்து. அனைத்து மனுக் குலத்தின் பாவ பரிகாரத்துக்காக ஏற்ற காலத்தில் பலியாவதற்காகவே அவர் மானிட அவதாரமேற்றார்; பாவமில்லாமல் பிறந்தார். முப்பத்து மூன்றரை ஆண்டுகள் இப்புவியில் பாவமின்றி வாழ்ந்தார்; அவரிடம் பாவமிருந்ததாக எவராலும் நிரூபிக்க இயலவில்லை. அவர் சர்வ வல்லமையுள்ள ஆண்டவராம் இறைவனாயிருப்பினும், தம்மைத் தாமை வெறுமையாக்கி, அடிமையின் வடிவெடுத்து, மனித சாயலானார்; மரணம் வரை, அதாவது சிலுவையில் மரிக்கும் அளவுக்குத் தம் விண்ணகத் தந்தைக்குக் கீழ்ப்படிந்தார்.

தெய்வத்துவம் அனைத்தும் இயேசு கிறிஸ்துவினுள் குடி கொண்டுள்ளன; கண்ணுக்குப் புலப்படாத இறைவனின் திருவுருவும், படைப்புக்கெல்லாம் முதற் பேறுமானவர் இவரே; இறைவனின் மாட்சிமையின் ஒளியும், அவரது தன்மையின் பிரதிபலிப்பும் இவரே; தமது வாக்கின் வல்லமையால் அனைத்தையும் தாங்குபவரும் இவரே. ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவுக்கு நம் பாவங்களை மன்னிக்க அதிகாரம் உண்டு; நம் ஆராதனைக்கு உரியவரும் அவரே; ஏனெனில் தம் உயிரைக் கொடுக்கவும், அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவும் அவருக்கு அதிகாரம் இருந்தது.

## மாபெரும் பழுதற்ற பலி

இரத்தம் சிந்துதலின்றி பாவ மன்னிப்பில்லை. ஆகவேதான் உலகெங்கும் பல தொன்மையான மார்க்கங்களில் பலிகள் செலுத்தப்படுகின்றன. பின்வரவிருந்த மாபெரும் நித்திய பலிக்கு இவை தற்காலிக முன்னடையாளங்களாம்; ஏனெனில், செம்மறியாடு, வெள்ளாடு முதலியவற்றின் இரத்தத்தால் பாவத்தைப் போக்க இயலா. மனுக் குலத்தின் மீட்புக்காக இறைவனே பாவமற்ற தம் இரத்தத்தை சிலுவையில் சிந்தியதற்கு அவை முன்னறிவிப்புக்களாம். இயேசு கிறிஸ்து உங்களை மிகவும் நேசிக்கிறார். எனவேதான், உங்கள் பாவங்கள், அக்கிரமங்கள், மீறுதல்கள், சாபங்கள் அனைத்தையும் தம் சிலுவையில் சுமந்து, தம் சுய இரத்தத்தை உங்கள் மீட்பின் பொருட்டு சிந்தினார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம் அனைத்துப் பாவங்களையும் நீக்கி நம்மைத் தூயோராக்குகின்றது.

## சிலுவையின் மீட்புப் பணி

உண்மையாகவே, இயேசு கிறிஸ்து நம் நோய்கள், பலவீனங்கள், துயரங்கள் அனைத்தையும தம் சிலுவையில் சுமந்து தீர்த்தார். நம் மீறுதல்களுக்காக அவர் காயப்பட்டார்; நம் அக்கிரமங்களுக்காக அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை அருளும் ஆக்கினை அவர் மீது விழுந்தது; அவரது காயங்களால் நாம் ஆரோக்கியமடைகிறோம். நம் அக்கிரமஙகளின் பொருட்டு அவர் ஒடுக்கப்பட்டு துன்புற்ற போது, தமது வாயைத் திறவாதிருந்தார்; மயிர் கத்தரிக்கப்படுகையில் சத்தமிடாத ஆட்டைப் போன்று அமைதியாயிருந்தார்; பாவ நிவாரண பலியாக தம்மைத் தாமே ஊற்றினார்.

அவர் செல்வந்தராயிருந்தும், அவரது ஏழ்மை வாயிலாக நாம் செல்வராகுமாறு, நம் பொருட்டு ஏழையானார்; நமக்கு மீட்பின் ஆடையை அருள, அவர் சிலுவையில் ஆடையற்றவரானார்; நம்மை இறைவனின் பார்வையில் தூயோராக்க, அவர் நமக்காக பாவமானார்; நம்மை ஆசீர்வதித்து, ஆசீர்வாதமாக்குமாறு அவர் நமக்காக சாபமானார்.

'இயேசு' எனும் பெயரின் பொருள் 'மீட்பர்' (இரட்சகர்) ஆகும். 'அதிசயமான ஆலோசகர்', 'வல்லமையுள்ள ஆண்டவர்', 'என்றுமுள தந்தை', 'சமாதான பிரபு', முதலிய பல பெயர்களும் அவருக்கு உண்டு. நம்மைப் போன்றே எல்லா வகைகளிலும் அவரும் சோதிக்கப்பட்டார்; ஆயினும் பாவம் செய்யவில்லை. எனவே, நமது அனைத்து தேவைகளிலும், எல்லா சோதனைகளிலும் நமக்கு உதவ அவரால் ஆகும்.

இயேசுவால் கூடாதது ஒன்றுமில்லை. நம் இழப்புக்களை யெல்லாம் ஈடு செய்யவும், குறைகளை யெல்லாம் நிறைவாக்கவும் அவரால் கூடும். உங்கள் சூழ்நிலைகளை அவர் நன்கறிவார். நீங்கள் விசுவாசத்துடன் அவரை அணுகினால், நிச்சயமாக அவர் உங்களுக்கு உதவுவார். அவரால் மன்னிக்க இயலாத பாவம் எதுவுமில்லை. உங்கள் குற்ற உணர்வுகளையும் சுமைகளையும் அகற்றி, நல் மனச் சாட்சியால் உங்களை ஆசீர்வதிக்க அவர் வல்லவர். அவரால் சுகமாக்க இயலாத நோய் நொடி எதுவுமே இல்லை. தம் சொல்லால் அண்ட சராசரங்களையும் உருவாக்கிய இயேசு ஆண்டவர் நிச்சயமாகவே எவ்வித அழிவு, வெறுமை மற்றும் நம்பிக்கையற்ற நிலையினின்றும் உங்களை விடுவிக்க வல்லவர்.

காலியாயுள்ள கல்லறை

இயேசு கிறிஸ்து உங்களுக்காக இரத்தம் சிந்தி சிலுவையில் உயிரை ஈந்தார்; அடக்கம் செய்யப்பட்டார். ஆயினும், பாவம், மரணம், பாதாளம், இருளின் ஆதிக்கம் ஆகியவற்றின் மீது வெற்றி சிறந்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்; நம் பழைய இருண்ட வாழ்வுக்கு முடிவுண்டாக்குகிறார்.

மரணம் இயேசுவை அடக்கி வைக்க இயலாதிருந்தது; விண்ணகத் தந்தை அவரை மரணத்தினின்று உயிரோடெழுப்பி, மரண பயத்தினின்றும் நம்மை விடுவிக்கின்றார். மனித சரித்திரத்தில், இயேசுவின் கல்லறை மட்டுமே காலியாயுள்ளது. அவரது உயிர்ப்பு வாயிலாக அவர் உண்மையாகவே இறை மகன் என்பதை தூய ஆவியார் பறை சாற்றுகின்றார்.

ஏன் இயேசு மட்டுமே?

- இயேசு பிறப்பிலும் வாழ்விலும் பாவமற்றவர்.
- நம் பாவங்களை மன்னிக்க இயேசுவுக்கு அதிகாரமுண்டு.
- நம் ஆராதனையை ஏற்றுக்கொள்ள இயேசுவுக்கு தகுதியும் அதிகாரமும் உண்டு.
- பிசாசுகள் கூட இயேசு ஒருவரே தூயவர் என சான்று பகர்ந்தன.
- தூய வேதாகத்தில் உலக மீட்பரின் பிறப்பு, பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு முதலியன குறித்து எழுதப்பட்டுள்ள முன்னூற்றுக்கும் மேலான தீர்க்க தரிசனங்கள் இயேசுவில் மிக மிக துல்லியமாக நிறைவேறின.

- பரிபூரண தெய்வத்துவமும் மனிதத்துவமும் ஒருங்கிணைந்த நபர் அவர் ஒருவரே; மனுக்குலத்தின் மீட்புக்காகவும், விண்ணகத்தகுதிக்காகவும் பலியானவரும் அவர் ஒருவரே.
- இயேசு, 'நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்' என தெளிவுபடுத்தியுள்ளார்.
- இயேசுவின் வாழ்வு கட்டுக்கதையல்ல, சரித்திர ஆதாரமுடையது; மனித சரித்திரத்தின் மையமும் இயேசுவே.
- இயேசுவின் அன்பு, மன்னிக்கும் மனப்பான்மை, மற்றும் போதனைகள் (எ- கா: 'உங்கள் விரோதிகளை நேசியுங்கள்'; 'உங்களைத் துன்புறுத்துவோருக்காக வேண்டுதல் செய்யுங்கள்'; 'ஒரு கன்னத்தில் அறைந்தோரிடம் மறுகன்னத்தையும் திருப்பிக்காண்பி.') பெரும்பாவிகள் உட்பட எண்ணற்ற மனிதர்களின் வாழ்வில் வியத்தகு உயிர்ப்பை அருளியுள்ளது.
- காலியாயுள்ள ஒரே கல்லறை இயேசு அடக்கம் செய்யப்பட்ட கல்லறை மட்டுமே. இயேசுவின் உயிர்ப்பு, அவரை விசுவாசிப்போருக்கும் நித்திய உயிர்ப்பும் விண்ணகப் பேறும் உண்டென்பதை உறுதி செய்கின்றது.

அனைவரையும் இயேசு அழைக்கிறார்

இயேசு சொன்னார்:

- 'பெரும்சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, நீங்கள் அனைவரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.'

- ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடம் வந்து பானம்செய்யட்டும்; என்னை விசுவாசிப்போர் உள்ளத்தினின்று ஜீவநதிகள் புறப்பட்டுச் செல்லும்.’
- ‘என்னிடம் வருகிறவனை நான் புறம்பே தள்ள மாட்டேன்.’
- ‘புவியோரே, என்னிடம் திரும்பி மீட்படையுங்கள்.’
- ‘உலகை தண்டிக்குமாறு வராமல் மீட்குமாறே வந்துள்ளேன்.’
- ‘என் வாக்குக்குச் செவிகொடுத்து என்னை விசுவாசிப்போருக்கு நித்திய ஜீவன் உண்டு.’
- ‘தாய் தன் பாலகனை மறந்தாலும் நான் உன்னை மறவேன்; என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்துள்ளேன்.’
- ‘பயப்படாதே, நான் உன் ஆண்டவர். திகையாதே, நான் உன்னை பலப்படுத்தி உனக்கு சகாயம் செய்வேன்.’

மீட்படைய நான் என்ன செய்ய வேண்டும்?

- சிந்தையாலும், சொல்லாலும், செயலாலும், கடமையில் தவறியதாலும் நாம் புரிந்துள்ள பாவங்களுக்காக மனம் வருந்த வேண்டும்.
- பாவப் பரிகாரமும், விண்ணகப் பேறும் அருளவல்லதொரு மீட்பரின் அவசியத்தை உணர வேண்டும்.
- இயேசுவை சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டு, அதை வாயினால் அறிக்கையிட வேண்டும்.

- இயேசு நம் பாவங்களுக்காக இரத்தம் சிந்தி, சிலுவையில் மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்; ஏனெனில் மரணம் அவரை அடக்கிவைக்க இயலாதிருந்தது என்பவற்றை விசுவாசிக்க வேண்டும்.

இயேசுவின் பெயரில் விசுவாசமுடையோராக அவரை ஏற்றுக்கொண்டோர் அனைவரும் தம் பிள்ளைகளாகுமாறு இறைவன் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

இத்தருணத்தைத் தவற விட வேண்டாம்

ஒரு முறை மரிப்பதும், பின்பு இயேசுவின் வெண் சிங்காசனத்தின் முன் நின்று நீதியான தீர்ப்பைப் பெற்றுக்கொள்வதும் மானிடர் அனைவருக்கும் நியமிக்கப்பட்டுள்ளது. இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு பாவமன்னிப்பைப் பெற்றடைந்த அனைவரும் நித்திய ஜீவனைப் பெற்று இயேசுவோடு என்றென்றும் வாழ்வர்.

இறைவன் நீதியுள்ளவராதலால், பாவத்தைத் தண்டித்துத்தான் ஆகவேண்டும். ஜீவ புத்தகத்தில் எவரது பெயர்கள் எழுதப்படவில்லையோ அவர்களனைவரும் அக்கினிக் கடலினுள் தூக்கியெறியப்படுவர் என வேதாகமம் திட்டவட்டமாக அறிவிக்கிறது; அத்தண்டனை தாங்க இயலாததாயிருக்கும். நரக அக்கினி அழியாதது; அங்கே புழு சாவதில்லை. இயேசு கிறிஸ்து நம் பாவங்களுக்காக ஏற்கனவே பலியானாராதலால், அவரை நம் இரட்சகராக

ஏற்றுக்கொள்கையில் நாம் தண்டனைத் தீர்ப்புக்குத் தப்பிக்கொள்வோம். நம் பாவத்துக்குரிய அபராதத்தை நாம் செலுத்தத் தேவையில்லை. உங்கள் பாவபாரத்தை அவர்மீது சுமத்திவிடுங்கள்.

இன்றே இரட்சண்ய நாள்

ஏற்ற தருணம் இதுவே; மீட்படையும் வாய்ப்பு இன்று உங்களுக்கு உண்டு; நாளையை நாமறியோம்; மனிதவாழ்வு புகையைப் போன்று விரைவில் மறைந்து விடும; எதிர்காலம் நமதன்று. இக்கைப்பிரதி தற்செயலாக உங்கள் கைக்கு வரவில்லை. இயேசு உங்களை மிகவும் நேசிக்கிறார்; தமது ராஜ்யத்திற்கு அன்புடன் அழைக்கிறார்; அவரை நிராகரிக்காதீர்; அவரது பேரன்பைப் புறக்கணிக்க வேண்டாம்.

அவரது தூயகரங்கள் உங்களை நோக்கி நீட்டப்பட்டுள்ளன. உங்கள் மீட்புக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி உயிரை ஈந்த இயேசுவால் உங்கள் அனைத்துத் தேவைகளையும் சந்திக்க இயலும். அவர் உங்கள் எல்லா துன்பங்களிலும் உங்களுக்கு உதவவும், உங்களை சுகமாக்கவும், நன்மைகளால் நிரப்பவும், உங்கள் குடும்பத்தை ஆசீர்வதிக்கவும் வல்லவர். இயேசு உங்களை மீட்க விரும்புகிறார்; உங்கள் இதயக் கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறார்; கதவைத் திறந்து அவரை ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா? அவர் உங்களோடு போஜனம்பண்ண விரும்புகிறார்.

<u>கவனத்துக்கு:</u> இயேசுவைப் பற்றி மேலும் அறிய விரும்பினால், தயவுசெய்து Google Play Store-Bible App- பை download செய்து, வேதாகமத்தைப் படியுங்கள்; அதன் வழியாக இயேசுவின் பேரன்பை அனுபவிக்கலாம்.